## வெள்ளிக்கிழமை (ஜும்ஆ குத்பா) பிரசங்கம்

## தேதி : 8 ரபீஉல் அவ்வல் 1448 ஹிஜ்ரி / 21 ஆகஸ்ட் 2026 கி.பி

# தலைப்பு: இஸ்லாமிய மார்க்க ஒழுக்கங்களிலிருந்து...

அனைத்துப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது. அவன் தன் ஞானத்தால் அனைத்துப் பொருட்களையும் சூழ்ந்திருக்கின்றான்; படைப்புகள் அனைத்தையும் மிக அழகாகப் படைத்துள்ளான். தன் அடியார்களை நேர்த்தியாக ஒழுங்குபடுத்தி அவர்களுக்குச் சிறந்த முறையில் ஒழுக்கத்தைப் புகட்டியுள்ளான். இந்த மார்க்கத்தை முழுமையான ஒரு வழிகாட்டியாக ஆக்கியுள்ளான். வாழ்வின் எந்தவொரு விஷயத்தையும் அது முறைப்படுத்தாமல் விட்டு விடவில்லை; எந்தவொரு குணத்தையும் நற்பண்பையும் அது சீர்படுத்தாமல் விட்டு விடவில்லை. அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணை யாருமில்லை என்று நான் சாட்சி கூறுகின்றேன். மேலும், முஹம்மது (ஸல்) அவர்கள் அவனுடைய அடியாரும் தூதருமாவார்கள் என்றும் சாட்சி கூறுகின்றேன். அவர்கள் நற்குணங்களை முழுமைப்படுத்தவும், நுட்பமான ஒழுக்கங்களைப் பயிற்றுவிப்பதற்காகவும் அனுப்பப்பட்டவர்கள். அவர்கள் மீதும், அவர்தம் குடும்பத்தினர், தோழர்கள் அனைவர் மீதும் அல்லாஹ்வின் அருளும் நல்வாழ்த்துகளும் என்றென்றும் உண்டாவதாக!

**இறைதுதிக்குப் பின் :**

அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்! நிச்சயமாக ஒரு சமூகம் என்பது அதன் அதிகப்படியான செல்வத்தைக் கொண்டோ, உயர்ந்த கட்டிடங்களைக் கொண்டோ அறியப்படுவதில்லை; மாறாக, அதன் நற்குணங்கள் மற்றும் ஒழுக்கங்களைக் கொண்டே அறியப்படுகிறது என்பதை அறிந்துகொள்ளுங்கள். (ஒரு கவிஞனின் கூற்றுப்படி:)

**"சமூகங்கள் என்பது நற்குணங்கள் இருக்கும் வரை மட்டுமே நிலைத்திருக்கும்;**

**அவர்களிடமிருந்து நற்குணங்கள் போய்விட்டால், அச்சமூகமே அழிந்துவிடும்."**

**மனிதனின் நடத்தையானது அவனது உள்ளத்தின் கண்ணாடியாகும். அவனது நன்னடத்தை (சுவை உணர்வு) என்பது அவனது மனசாட்சியின் வெளிப்பாடாகும்.**

**وَاتَّقُوا يَوْمًا تُرْجَعُونَ فِيهِ إِلَى اللَّهِ ثُمَّ تُوَفَّى كُلُّ نَفْسٍ مَا كَسَبَتْ وَهُمْ لَا يُظْلَمُونَ**

"நீங்கள் அல்லாஹ்விடம் மீட்கப்படும் ஒரு நாளை அஞ்சிக் கொள்ளுங்கள்! பின்னர், ஒவ்வொரு ஆத்மாவிற்கும் அது சம்பாதித்த கூலி முழுமையாக வழங்கப்படும்; அவர்கள் அநீதி இழைக்கப்பட மாட்டார்கள்." (அல்குர்ஆன், அல்பகரா 2 : 281)

**முஸ்லிம்களே!**

இந்த மார்க்கத்தின் மிக ஆச்சரியமான சிறப்பம்சம் என்னவெனில், இது பெரிய பெரிய விஷயங்களைச் சீர்படுத்துவதோடு மட்டும் நின்றுவிடவில்லை; மாறாக, மனிதனின் அன்றாடப் பழக்கவழக்கங்கள் மற்றும் மிகவும் சிறிய செயல்பாடுகள் வரை ஊடுருவி, அவற்றை மிக அழகாக வடிவமைத்துள்ளது. இதனால் ஒரு முஸ்லிமின் முழு வாழ்க்கையும் ஒழுக்கம் நிறைந்ததாக மாறுகிறது: அவனது வழிபாடுகளில், வியாபாரத்தில், பேச்சுவார்த்தையில், உணவில், தூக்கத்தில், ஏன்... இயற்கை உபாதையைக் கழிக்கும் வழிகாட்டலில் கூட! ஸல்மான் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒருவர் அவரிடம், "உங்கள் தோழர் (நபிகள் நாயகம்) உங்களுக்கு எல்லாவற்றையும் கற்றுத் தருகிறாரே... இயற்கை உபாதையை கழிப்பது எப்படி என்பது வரை கற்றுத் தருகிறாரே!" என்று (கேலியாகக்) கேட்டார். அதற்கு ஸல்மான் (ரழி) அவர்கள்: "ஆம், நிச்சயமாக! நீர் கேலி செய்தபோதிலும் சரி, நாங்கள் இயற்கை உபாதையை கழிக்கும் முறையை அவர் எங்களுக்குக் கற்றுத் தந்திருக்கிறார். மேலும்:

نَهَانَا أَنْ نَسْتَقْبِلَ الْقِبْلَةَ وَأَنْ نَسْتَدْبِرَهَا، وَأَنْ نَسْتَنْجِيَ بِيَمِينِهِ، وَأَنْ يَتَمَسَّحَ أَحَدُنَا بِرَجِيعٍ وَلَا عَظْمٍ، وَأَنْ يَسْتَنْجِيَ بِأَقَلَّ مِنْ ثَلَاثَةِ أَحْجَارٍ

"நாங்கள் இயற்கை உபாதை கழிக்கும்போது கிப்லாவை முன்னோக்குவதையோ, அதற்குப் பின்னு காட்டுவதையோ, வலது கையால் சுத்தம் செய்வதையோ, காய்ந்த சாணம் மற்றும் எலும்பைக் கொண்டு சுத்தம் செய்வதையோ, மற்றும் மூன்று கற்களுக்குக் குறைவாகக் கொண்டு சுத்தம் செய்வதையோ நபிகளார் எங்களுக்குத் தடை செய்துள்ளார்கள்" என்று பதிலளித்தார்கள்.(நூல்: முஸ்லிம், அஹ்மத்)

நீங்கள் எப்படி அமர வேண்டும், எப்படிப் பேச வேண்டும், தும்மும்போதும் கொட்டாவி விடும்போதும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், மற்றும் பிறருக்குச் சிறு இடையூறும் நேராதவாறு எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று கற்றுத் தரும் மார்க்கம் இது! இதற்குப் பிறகும் ஒரு மார்க்கத்தில் என்ன முழுமை இருக்க முடியும்? இதைவிடச் சிறந்த வழிகாட்டல் வேறு என்ன இருக்க முடியும்?

**அல்லாஹ்வின் அடியார்களே!**

இஸ்லாத்தில் 'ஒழுக்கம்' என்பது வெறும் போலித்தனமான வெளிப்புற அலங்காரமோ அல்லது தற்காலிகமான நடிப்போ அல்ல. மாறாக, அது உள்ளத்தில் இருக்கும் ஒரு வழிபாடு! அதைக் கொண்டு மனிதர்களின் உள்ளங்கள் அளவிடப்படுகின்றன; மக்களின் தன்மைகள்

கண்டறியப்படுகின்றன. யார் இந்தச் சிறு நுட்பமான ஒழுக்க பேணுதல்களைக் கடைப்பிடிக்கிறாரோ, அது அவரது உள்ளத்தின் உயிரோட்டத்தையும், அவரது நற்குணத்தையும் காட்டுகிறது. யார் இவற்றை அலட்சியப்படுத்துகிறாரோ, அது அவரது உள்மனத்தின் அகந்தையையும், முரட்டுத்தனமான சுபாவத்தையும் வெளிப்படுத்துகிறது. இதனால்தான் அன்றாடப் பழக்கவழக்கங்களையும் நடத்தைகளையும் சீர்படுத்தும் ஒழுக்கங்களைச் மார்க்கம் நமக்குத் தந்துள்ளது. அந்த ஒழுக்கங்களில் ஒன்றுதான் "தும்மலின் போது பேண வேண்டிய ஒழுக்கம்" ஆகும். அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

إِنَّ اللَّهَ يُحِبُّ العُطَاسَ، وَيَكْرَهُ التَّثَاؤُبَ، فَإِذَا عَطَسَ فَحَمِدَ اللَّهَ، فَحَقٌّ عَلَى كُلِّ مُسْلِمٍ سَمِعَهُ أَنْ يُشَمِّتَهُ

"நிச்சயமாக அல்லாஹ் தும்மலை விரும்புகிறான்; கொட்டாவியை வெறுக்கிறான். எனவே, உங்களில் ஒருவர் தும்மி, 'அல்ஹம்துலில்லாஹ்' (அல்லாஹ்வுக்கே புகழனைத்தும்) என்று கூறினால், அதைக் கேட்கும் ஒவ்வொரு முஸ்லிமும் அவருக்கு 'யர்ஹமுகல்லாஹ்' (அல்லாஹ் உமக்கு அருள்புரிவானாக) என்று மறுமொழி கூறுவது கடமையாகும்."(நூல்: புகாரி, முஸ்லிம்)

**சிந்தித்துப் பாருங்கள்! இஸ்லாம் தும்மலைக்கூட இறைவனை நினைவுகூரும் (திக்ர்) ஒரு வாய்ப்பாக மாற்றி, மனிதர்களுக்கிடையில் அன்பையும் கருணையையும் வளர்க்கும் தொடர்புப் பாலமாக ஆக்கியுள்ளது!**

- **தும்மியவர்: الحَمْدُ لِلَّهِ (அல்ஹம்துலில்லாஹ் - அல்லாஹ்வுக்கே புகழனைத்தும்) எனக் கூறுகிறார்.**

- **அதைக் கேட்கும் சகோதரன்: يَرْحَمُكَ اللَّهُ (யர்ஹமுகல்லாஹ் - அல்லாஹ் உமக்கு அருள்புரிவானாக) என்று பிரார்த்திக்கிறார்.**

- **அதற்குத் தும்மியவர் மீண்டும்: يَهْدِيكُمُ اللَّهُ وَيُصْلِحُ بَالَكُمْ (யஹ்தீகுமுல்லாஹு வ யுஸ்லிஹு பாலகும் - அல்லாஹ் உங்களுக்கு நேர்வழி காட்டி, உங்கள் எண்ணங்களை/நிலையைச் சீராக்குவானாக) என்று பதிலளிக்கிறார்.**

**இவை எளிய சொற்கள்; ஆனால், மனிதர்களிடையே பரஸ்பர அன்பையும் பிணைப்பையும் விதைக்கக்கூடியவை!**

**மேலும், தும்மும்போது, பிறருக்குச் சிரமம் தராமல் தன் சப்தத்தைக் குறைப்பதும், வாயை மூடிக்கொள்வதும் இஸ்லாமிய ஒழுக்கமாகும்:**

كَانَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ إِذَا عَطَسَ غَطَّى وَجْهَهُ بِيَدِهِ أَوْ بِثَوْبِهِ، وَغَضَّ بِهَا صَوْتَهُ

"நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தும்மும்போது, தமது கரத்தாலோ அல்லது ஆடையாலோ தமது முகத்தை மூடிக் கொள்வார்கள்; மேலும் தும்மலின்

சப்தத்தைக் குறைத்துக் கொள்வார்கள்." (நூல்: திர்மிதி - அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழி)

**நம்பிக்கையாளர்களே!**

மார்க்கத்தின் அந்த ஒழுக்கங்களில் இன்னொன்று தான் கொட்டாவி விடும்போது பேண வேண்டிய ஒழுக்கம் ஆகும். அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

التَّثَاؤُبُ مِنَ الشَّيْطَانِ، فَإِذَا تَثَاءَبَ أَحَدُكُمْ فَلْيَرُدَّهُ مَا اسْتَطَاعَ، فَإِنَّ أَحَدَكُمْ إِذَا قَالَ: هَا، ضَحِكَ الشَّيْطَانُ

"கொட்டாவி ஷைத்தானிடமிருந்து உண்டாகிறது. எனவே, உங்களில் ஒருவருக்குக் கொட்டாவி வந்தால், அவரால் இயன்றவரை அதைத் தடுத்துக் கொள்ளட்டும். ஏனெனில், உங்களில் ஒருவர் கொட்டாவி விடும்போது 'ஆ...' என்று சப்தமிட்டால், ஷைத்தான் சிரிக்கிறான்."(நூல்: புகாரி, முஸ்லிம்.)

கொட்டாவி ஷைத்தானோடு தொடர்புபடுத்தப்பட்டதற்குக் காரணம்: அது சோம்பல், உடற்பாரம் மற்றும் சுறுசுறுப்பின்மையின் வெளிப்பாடாகும். ஆனால், அல்லாஹ் விரும்புகின்ற தும்மலோ சுறுசுறுப்பு, புத்துணர்ச்சி மற்றும் இயங்குதன்மையைக் குறிக்கிறது. எனவே, ஒரு முஸ்லிம் கொட்டாவி ஏற்படுவதற்கான காரணங்களைத் தவிர்ப்பதும், தன் கண்ணியத்தைப் பாதுகாக்கும் வகையிலும் தோற்றத்தைப் பாழாக்காத வகையிலும் அதைக் கட்டுப்படுத்துவதும் விரும்பத்தக்கதாகும்.

நுட்பமான ஒழுக்கங்களில் மற்றொன்று "ஏப்பம் விடுதலின் ஒழுக்கம்" ஆகும். ஏப்பம் என்பது வயிறு நிரம்பும்போது வாயின் வழியாக வெளியேறும் காற்றினுடைய சப்தமாகும். சுற்றியிருப்பவர்களைப் பற்றிக் கவலைப்படாமல் வேண்டுமென்றே அந்த வெறுக்கத்தக்க சப்தத்தை எழுப்பும்போது அது பிறருக்கு பெரும் இடையூறை ஏற்படுத்துகிறது. இப்னு உமர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒருவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் ஏப்பம் விட்டார். அப்போது நபிகளார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: كُفَّ عَنَّا جُشَاءَكَ "உமது ஏப்பச் சப்தத்தை எங்களை விட்டுத் தடுத்து நிறுத்தும்!" (நூல்: திர்மிதி - அல்பானி (ரஹ்) அவர்கள் இதை ஹஸன் என்று தரப்படுத்தியுள்ளார்கள்)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இங்கு நன்னடத்தையையும் பழக்கவழக்கத்தைச் சீர்படுத்துவதையும் ஒன்றிணைத்துக் காட்டியுள்ளார்கள். ஏப்பத்தைத் தடுக்குமாறு கூறிய தடை, அதற்குரிய காரணமான அளவுக்குச் அதிகமாகச் சாப்பிடுவதைத் (வயிறு நிரம்புவதை) தடுப்பதற்கான தடையாகும். மிக்தாம் பின் மஃதீகரிப் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறக் கேட்டேன்:

مَا مَلَأَ آدَمِيٌّ وِعَاءً شَرًّا مِنْ بَطْنٍ، بِحَسْبِ ابْنِ آدَمَ أُكُلَاتٌ يُقِمْنَ صُلْبَهُ، فَإِنْ كَانَ لَا مَحَالَةَ فَثُلُثٌ لِطَعَامِهِ، وَثُلُثٌ لِشَرَابِهِ، وَثُلُثٌ لِنَفَسِهِ

"ஆதமின் மகன் தன் வயிற்றை விடக் கெட்ட எந்தவொரு பாத்திரத்தையும் நிரப்பியதில்லை! மனிதனின் முதுகெலும்பை நிமிர்த்தும் சில கவள உணவுகளே அவனுக்குப் போதுமானது. வேறு வழியே இல்லை என்றால், மூன்றில் ஒரு பங்கு உணவிற்கும், மூன்றில் ஒரு பங்கு தண்ணீருக்கும், மூன்றில் ஒரு பங்கு சுவாசத்திற்குமாக ஆக்கிக் கொள்ளட்டும்!" (நூல்: திர்மிதி - இது ஸஹீஹான ஹதீஸ்) அரபியர்கள் கூறுவார்கள்**: "வயிறு நிரம்பினால், சிந்தனை முடங்கிவிடும்!"**

நான் எனது இந்த உரையை நிறைவு செய்து, எனக்காகவும் உங்களுக்காகவும் அல்லாஹ்விடம் அனைத்துப் பாவங்களுக்காகவும் மன்னிப்புக் கோரி அவன்பால் மீள்கிறேன். நீங்களும் அவனிடம் பிழைபொறுக்கத் தேடிக் கொள்ளுங்கள். நிச்சயமாக அவன் மிகவும் மன்னிப்பவனாகவும் நிகரற்ற அன்புடையவனாகவும் இருக்கிறான்.

## இரண்டாம் குத்பா

நிறைவான தூய்மையான பாக்கியமான அனைத்துப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது. அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை என்றும், முஹம்மது (ஸல்) அவர்கள் அவனுடைய அடியாரும் தூதருமாவார்கள் என்றும் சாட்சி கூறுகிறேன்.

**இறைதுதிக்குப் பின் :**

அல்லாஹ்வை அஞ்சவேண்டிய முறைப்படி அஞ்சிக் கொள்ளுங்கள். இரகசியத்திலும் பரகசியத்திலும் அவனைப் பயந்து கொள்ளுங்கள். நிச்சயமாக நீங்கள் அவனிடமே ஒன்றுதிரட்டப்படுவீர்கள் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

**பாக்கியம் பெற்றவர்களே!**

பொதுவான சூழல்களிலேயே இஸ்லாம் இந்த நன்னடத்தைகளை முறைப்படுத்தியிருக்கின்றது என்றால், அல்லாஹ்வின் வீடுகளாகிய பள்ளிவாசல்களில் இவற்றைப் பேணுவது மிகவும் அவசியமானதும் மகத்தானதும் ஆகும். ஏனெனில், பள்ளிவாசல்களுக்கு என்று தனி கண்ணியமும் கௌரவமும் உள்ளது! அல்லாஹ் கூறுகிறான்:

**فِي بُيُوتٍ أَذِنَ اللَّهُ أَنْ تُرْفَعَ وَيُذْكَرَ فِيهَا اسْمُهُ يُسَبِّحُ لَهُ فِيهَا بِالْغُدُوِّ وَالْآصَالِ (36) رِجَالٌ لَا تُلْهِيهِمْ تِجَارَةٌ وَلَا بَيْعٌ عَنْ ذِكْرِ اللَّهِ وَإِقَامِ الصَّلَاةِ وَإِيتَاءِ الزَّكَاةِ يَخَافُونَ يَوْمًا تَتَقَلَّبُ فِيهِ الْقُلُوبُ وَالْأَبْصَارُ**

"அல்லாஹ்வின் பெயர்கள் உயர்த்தப்படவும், அவனுடைய பெயர் துதிக்கப்படவும் அவன் அனுமதித்துள்ள (பள்ளிவாசல்) இல்லங்களில், காலையிலும் மாலையிலும் அவனைத் துதி செய்கிறார்கள். வியாபாரமோ அல்லது வாங்குவதோ விற்பதோ அல்லாஹ்வை நினைவுகூர்வதிலிருந்தும், தொழுகையை நிலைநிறுத்துவதிலிருந்தும், ஜகாத் கொடுப்பதிலிருந்தும் அவர்களைப் பராக்காக்காது. உள்ளங்களும் பார்வைகளும் நிலைகுலைந்து போகும் ஒரு நாளை அவர்கள் அஞ்சுகிறார்கள்."(அல்குர்ஆன், அந்நூர் 24 : 36 - 37)

இன்றைக்குப் பள்ளிவாசல்களில் கவனிக்கப்படாமல் நிகழும் எத்தனையோ இடையூறுகளை நாம் காண்கிறோம்! வாயை மூடாமலும் சப்தத்தைக் குறைக்காமலும் தும்முவது, கொட்டாவி விடுவது, மற்றும் ஏப்பம் விடுவது போன்றவை நிகழ்கின்றன. பள்ளிவாசல்கள் என்பது மனித உறுப்புகள் அமைதிபெறவும், உள்ளங்கள் அச்சபக்தியோடு நடுங்கவும் வேண்டிய இடங்களாகும்! மனிதர்களின் அவைகளில் பேணப்படும் ஒழுக்கம், அகிலத்தைப்பாடைத்து அமைத்த இறைவனின் வீட்டில் அலட்சியப் படுத்தப்படலாமா?!

**நம்பிக்கையாளர்களே!**

பள்ளிவாசலைக் கண்ணியப்படுத்துவது என்பது, மக்களை முகம் சுளிக்க வைக்கும் மற்றும் வழிபாட்டின் அமைதியைக் குலைக்கும் அனைத்து விஷயங்களிலிருந்தும் அதைப் பாதுகாப்பதாகும். பள்ளிவாசலில் குர்ஆனைக்கூட உரத்த குரலில் ஓதுவதற்கு மார்க்கம் தடை விதித்திருக்கும் போது, இதுபோன்ற இடையூறுகளை சப்தமாகச் செய்வது எத்தகைய தவறு?! என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அபூஸயீத் அல்-குத்ரீ (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

أَلَا إِنَّ كُلَّكُمْ مُنَاجٍ رَبَّهُ، فَلَا يُؤْذِيَنَّ بَعْضُكُمْ بَعْضًا، وَلَا يَرْفَعْ بَعْضُكُمْ عَلَى بَعْضٍ فِي الْقِرَاءَةِ

"அறிந்துகொள்ளுங்கள்! நிச்சயமாக நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் இறைவனிடம் உரையாடிக் கொண்டிருக்கிறீர்கள். எனவே, உங்களில் ஒருவர் மற்றவருக்குத் தொல்லை தர வேண்டாம்! மேலும், ஓதும்போது உங்களில் ஒருவர் மற்றவரை விடச் சப்தத்தை உயர்த்த வேண்டாம்!"(நூல்: அபூதாவுத் - அல்பானி (ரஹ்) அவர்கள் இதை ஸஹீஹ் என்று தரப்படுத்தியுள்ளார்கள்)

ஸாயிப் பின் யஸீத் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

كُنْتُ قَائِمًا فِي المَسْجِدِ فَحَصَبَنِي رَجُلٌ، فَنَظَرْتُ فَإِذَا عُمَرُ بْنُ الخَطَّابِ رَضِيَ اللهُ عَنْهُ فَقَالَ: اذْهَبْ فَأْتِنِي بِهَذَيْنِ، فَجِئْتُهُ بِهِمَا، قَالَ: مَنْ أَنْتُمَا - أَوْ مِنْ أَيْنَ أَنْتُمَا؟ - قَالَا: مِنْ أَهْلِ الطَّائِفِ، قَالَ: لَوْ كُنْتُمَا مِنْ أَهْلِ البَلَدِ لَأَوْجَعْتُكُمَا،، تَرْفَعَانِ أَصْوَاتَكُمَا فِي مَسْجِدِ رَسُولِ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ !

"நான் பள்ளிவாசலில் நின்றுகொண்டிருந்தபோது, ஒருவர் என் மீது சிறு கல்லை வீசி எறிந்தார். நான் திரும்பிப் பார்த்தபோது, அங்கு உமர் பின் அல்-கத்தாப் (ரழி) அவர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்கள் என்னிடம்: 'நீர் சென்று அந்த இருவரையும் என்னிடம் அழைத்து வாரும்!' என்றார்கள். நான் அவர்களை அவர்களிடம் அழைத்து வந்தேன். உமர் (ரழி) அவர்கள்: 'நீங்கள் இருவரும் யார்? - அல்லது எந்த ஊரைச் சேர்ந்தவர்கள்?' என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள்: 'நாங்கள் தாயிஃப் ஊரைச் சேர்ந்தவர்கள்' என்றனர். அப்போது உமர் (ரழி) அவர்கள்: 'நீங்கள் இந்த ஊரைச் (மதீனாவைச்) சேர்ந்தவர்களாக இருந்திருந்தால், உங்களுக்குக் கடுமையான தண்டனை அளித்திருப்பேன்! அல்லாஹ்வின் தூதர்

(ஸல்) அவர்களின் பள்ளிவாசலில் உங்கள் சப்தத்தை உயர்த்துகிறீர்களா?!' என்று கண்டித்தார்கள்." (நூல்: புகாரி)

**அல்லாஹ்வின் அடியார்களே!**

இதுபோன்ற விஷயங்களில் ஒழுக்கத்தைப் பேணுவது என்பது உள்ளத்தின் உயர்வுக்கும், மனசாட்சியின் உயிருள்ள தன்மைக்கும் சான்றாகும். ஏனெனில், ஒரு இறைநம்பிக்கையாளன் தனக்காக மட்டும் வாழ்வதில்லை; மாறாக, தன்னைச் சுற்றியிருப்பவர்களையும் கவனத்தில் கொண்டு, அவர்களுக்குச் சிறிய அளவிலான இடையூறுகள் நேர்வதையும் தவிர்க்கிறான். அப்துல்லாஹ் பின் அம்ர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

الْمُسْلِمُ مَنْ سَلِمَ الْمُسْلِمُونَ مِنْ لِسَانِهِ وَيَدِهِ، وَالْمُهَاجِرُ مَنْ هَجَرَ مَا نَهَى اللَّهُ عَنْهُ

"பிற முஸ்லிம்கள் எவரது நாவிலிருந்தும் கரத்திலிருந்தும் பாதுகாப்புப் பெறுகிறார்களோ அவரே (உண்மையான) முஸ்லிமாவார். மேலும், அல்லாஹ் எவற்றைத் தடுத்துள்ளானோ அவற்றை விட்டு விலகியவரே (உண்மையான) முஹாஜிர் (துறந்தவர்) ஆவார்." (நூல்: புகாரி, முஸ்லிம்)

நாவினாலும் கரத்தினாலும் துன்புறுத்துவது எவ்வாறு தடுக்கப்பட்டுள்ளதோ, அதேபோன்று மக்களை முகம்சுளிக்க வைக்கும் மற்றும் இடையூறு செய்யும் அனைத்துச் செயல்களும் தடுக்கப்பட்டவைகளாகும். எனவே, ஒரு முஸ்லிம் தன் மனதை இதுபோன்ற நாகரிகமான நன்னடத்தைகளில் பழக்கப்படுத்த வேண்டும்; பிறருக்கும் வழிகாட்ட வேண்டும்; மேலும், தன் ஆத்மாவை இந்த ஒழுக்க விழுமியங்களுக்கு உட்படுத்த வேண்டும்.

யா அல்லாஹ்! இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் கண்ணியப் படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! யா அல்லாஹ்! முஸ்லிம்களான ஆண்கள், பெண்கள், முஃமின்களான ஆண்கள், பெண்கள்—அவர்களில் உயிரோடு இருப்பவர்களையும் மரணித்தவர்களையும் மன்னித்தருள்வாயாக! யா அல்லாஹ்! எங்கள் தலைவரையும் (அமீர்) அவரது இளவரசரையும் உனது நேர்வழியின் பால் வழிநடத்துவாயாக! அவர்களின் அனைத்துக் காரியங்களையும் உனக்குக் கட்டுப்படுவதிலும் உனது திருப்தியிலும் அமைத்துத் தருவாயாக! இந்த நாட்டை அச்சமற்றதாகவும், அமைதியானதாகவும், வளமானதாகவும், பாதுகாப்பு மற்றும் ஈமான் நிறைந்த பூமியாகவும் ஆக்கியருள்வாயாக! மேலும், அனைத்து முஸ்லிம் நாடுகளையும் அவ்வாறே பாதுகாப்பாயாக!

**(வெள்ளிக்கிழமை மாதிரிப் பிரசங்கத் தயாரிப்புக் குழு)**